செங்கோட்டை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2025ம் ஆண்டு ஜூன் 10ம் தேதி செவ்வாய் கிழமை 10/06/25 காலை 11.30 மணி அளவில் கூட்டரங்கில் நடவடிக்கைகள்

தலைமை : திருமதி. ர. ராமலட்சுமி தலைவர்

முன்னிலை : ① திரு. நவநீதகிருஷ்ணன் து. தலைவர்
② திரு. சி. புகழேந்தி MA BED ஆணையாளர்

**மன்றப்பொருள் : 01**

செங்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சிறு குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்களில் குடிநீர் இணைப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.14000/- (பதிநான்காயிரம்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 02**

செங்கோட்டை நகராட்சி பேரூந்து நிலையத்தில் கோடை காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் மார்ச் 2025 முதல் மே 2025 வரை டேங்கர் லாரி மூலம் குடிநீர் நிரப்பிய வகைக்கு செலவினம் ரூ.12,000/- (பனிரெண்டாயிரம்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 03**

தமிழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கும் வகையில் ஸ்டீக்கர்கள், நோட்டீஸ்கள் மற்றும் பிரிண்டிங் இனங்கள் அச்சிட தூத்துக்குடி மாவட்ட Hi Tech கூட்டுறவு சங்கம் மூலம் பணி செய்ய செலவினம் ரூ. 2.95 இலட்சம் (இரண்டு இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 04**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் மற்றும் விதிகள் 2023-ன் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்ட விதிகளுக்கு புதிய நச்சு கழிவு மேலாண்மை தொடர்பான துணை விதிகளை உருவாக்க வழிகாட்டுதல், நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட துணை விதிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட துணை விதிகளை அரசிதழில் விளம்புகை செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்:237/2017/H1)

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 05**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்வதற்கு புவியியல் குறியிட்டின் வரைபடம் தயாரித்து கணிணியில் பதிவேற்றம் செய்திட தூய்மை இந்தியா இயக்கம் 2025 (Swachh Survekshan) வழிகாட்டுதல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் செங்கோட்டை நகராட்சியின் எல்லை வரைபடத்தை மேம்படுத்துவதற்கு தனியாக வல்லுநர் மூலமாக பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்:1551/2021/H1)

வ. எண்.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 06**

செங்கோட்டை நகராட்சியில் 1 முதல் 24 வார்டுகள் வரை குடிநீர் விநியோகம் செய்யும் பணியாளர்கள் 6 நபர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்தி உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:L1/2630/2024, நாள்:27.06.2024ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.~~555~~/- வீதம் ஜூலை 2025 முதல் மார்ச் 31.03.2026 வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்தக்காரர் மூலம் பணி நீட்டிப்பு செய்து ஊதியம் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ரூ577 Ramdas 16.7.25

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையை குடிநீர் நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 07**

செங்கோட்டை நகராட்சி தூய்மை பணியாளர்கள் குடியிருப்பின் பின்பகுதியில் கழிவு நீர் குழாய்கள் உடைந்த நிலையில் கழிவு நீர் வீட்டின் பின்புறம் தேங்கும் நிலை உள்ளதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ள காரணத்தினால் தூய்மை பணியாளர்களின் குடியிருப்பின் பின்புறம் கழிவு நீர் கால்வாய் அமைக்க ரூ.5.50 இலட்சம் (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம்) செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 08**

திரு.A.மகபூபாஷா என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் : WP(MD) No:8874/2025ன்படி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு தற்போது விசாரணையில் இருந்து வருவதால் வழக்கு தொடர்பாக இந்நகராட்சி சார்பாக வழக்கினை ஏற்று நடத்திட திரு.P.ஆதிமூல பாண்டியன் அவர்களை ஏற்று நடத்திட அனுமதிக்க மன்றத்தின் பின்னனேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப் பொருள்: 09**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் இரண்டு அங்கன்வாடி மையங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், செங்கோட்டை அவர்களால் சரி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் பழுது பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் ரூ.20,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் அங்கன்வாடி பழுது பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) செலவின தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப் பொருள்: 10**

தூய்மை மிஷின் 2025 வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில், செங்கோட்டை நகராட்சி வளாகத்தில் 03.06.2025 அன்று குழு நேரடியாக ஆய்வு செய்த போது நகராட்சியின் தூய்மை பணிக்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களில் சில பழுதடைந்து மற்றும் அவை பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ள இடத்தில், வளாகத்தில் இருக்கும் மரங்களிலிருந்து உதிரக்கூடிய இலை-தழைகள் விழுந்து இப்பகுதி முழுவதும் கழிவுகள் சேர்ந்து கொண்டுள்ளது. மேலும் வாகனத்தின் உதிரிப் பாகங்கள் நீண்ட நாட்களாக வாகனங்கள் ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் அவை தினந்தோறும் சேதாரமாகும் வண்ணமாக உள்ளது. எனவே, மேற்படி வாகனங்களில்,

1. பழுது நீக்கம் செய்து பயன்படுத்த முடிந்தவற்றை பழுது நீக்கம் செய்திடவும்
2. பழுது நீக்கம் செய்ய முடியாமல் இயங்காத மற்றும் இயக்க முடியாத நிலையில் உள்ள வாகனங்களை அப்புறப்படுத்தவும்,

மன்ற ஒப்புதலுக்காக

அலுவல் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப் பொருள்: 11**

தூய்மை மிஷின் 2025 வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில், செங்கோட்டை நகராட்சி வளாகத்தில் 03.06.2025 அன்று குழு நேரடியாக ஆய்வு செய்த போது, நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்ட நாற்காலிகளில் சில பழுதடைந்து மற்றும் அவை பயன்படுத்த முடியாமல் மன்றக்கூடத்தின் எதிரே, மரத்தடியில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நாற்காலிகள் வைக்கப்பட்டுள்ள இடத்தில், மரங்களிலிருந்து உதிரக்கூடிய இலை-தழைகள் விழுந்து நாற்காலிகளிடையே கழிவுகள் சேர்ந்து கொண்டுள்ளது. மேலும் நாற்காலிகள் நீண்ட நாட்களாக ஒரே இடத்தில் வைக்கப்பட்டுள்ளதால் அவை தினந்தோறும் சேதாரமாகும் வண்ணமாக உள்ளது. எனவே, மேற்படி நாற்காலிகளில்,

1. பழுது நீக்கம் செய்து பயன்படுத்த முடிந்தவற்றை பழுது நீக்கம் செய்திடவும்
2. பழுது நீக்கம் செய்ய முடியாதவற்றை அப்புறப்படுத்தவும்,

மன்ற ஒப்புதலுக்காக

அலுவல் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப் பொருள்: 12**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை வெளிப்புற கடை எண் 12க்கு 28.05.2025ல் நடைபெற்ற பொதுஏல அறிவிப்பின் படி கீழ்கண்ட நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தபுள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்ட நபர்கள் குத்தகைதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | எ.சங்கர்<br>10/7/36எ ராமசாமி தெரு<br>செங்கோட்டை | 2990/- |
| 2 | எ.ரவிசெல்வம்<br>த/பெ அரசப்பன்<br>1வது வடக்கு தெரு ராயல்<br>சிட்டிசுமைதீத்தபுரம்<br>கொட்டாகுளம் | 2980/- |

எனவே வரிசை 1ல் கண்ட நபர் திரு.எ.சங்கர் என்பவர் அரசு கோள்வி விட உச்சபட்ச ஏலக்கேள்விக்கு ரூ.2990/-குத்தகை உரிமம் கோரியுள்ளார்.ஆகையால் 01.06.2025முதல் குத்தகை உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-3090/2015/அ1

திரு.எ.சங்கர் என்பவர் அரசு கோள்வி விட உச்சபட்ச ஏலக்கேள்விக்கு ரூ.2990/-க்கு குத்தகை உரிமம் கோரியுள்ளார்.ஆகையால் 01.06.2025 முதல் குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்